
81

மாத இதழ்

8/- காசு

நவ.' 87.

# சுட்டு




FREE E - BOOKS , www.thamizham.net.,

## அணுகுண்டுகள் வைத்திருக்கும் நாடுகள்

ஐக்கிய அமெரிக்கா (U.S.A.), சோவியத் யூனியன் (U.S.S.R.) பிரான்ஸ், பிரிட்டன், சைனா.

—x—x—

பிறநாடுகளின் அணுகுண்டுகளை தனது மண்ணில் வைத்துள்ள நாடுகள்:

பெல்ஜியம், பிரிட்டன், கிழக்குஜெர்மனி, இத்தாலி, கிரீஸ், நெதர்லாண்ட், போலந்து, துருக்கி, மேற்குஜெர்மனி.

—x—x—

அணுகுண்டுகள் வைத்திருக்கலாம் என சந்தேகிக்கக் கூடிய நாடுகள்.

இந்தியா, (ஒரு முறை பரிசோதித்தது) இஸ்ரேல், தென் ஆப்பிரிக்கா.

—x—x—

அணுகுண்டு தயாரிக்கலாம் என சந்தேகிக்கக்கூடிய நாடுகள்.

அர்ஜெண்டினா, பிரேஸில், ஈரான், ஈராக், லிபியா, வட கொரியா, பாக்கீஸ்தான், தென் கொரியா, தாய்வான்,

—x—x—

நன்றி :—ப்ளைன் ட்ரூத்

தகவல்: பம்பாய் புதியவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

## சிகரெட் மனித நாசினி

சிகரெட், புகைப்பதால் என்ன நன்மை அல்லது தீமை ஏற்படுகிறது? இலட்சக்கணக்கில் மக்கள் சிகரெட் புகைப்பதற்கு என்ன காரணம்? விளம்பரங்கள் சொல்வதெல்லாம் உண்மையா?

சிகரெட் மனிதனை மிக மெதுவாக கொல்லும் விஷம். இது நம்மில் பலருக்கு தெரியும். ஆனாலும் சிகரெட் விற்பனை மட்டும் அமோகமாக நடந்து கொண்டு வருகிறது.

சிகரெட் புகையில் கிட்டத்தட்ட 270 ரசாயண பொருள்கள் உள்ளன. இவற்றில் சுமார் 15 ரசாயன பொருள்கள் நச்சுத் தன்மை கொண்டது. இவற்றில் ஒன்று நிக்கோடின் என்பது.

சிகரெட் புகைப்பதால் இந்த நிக்கோடின் நுரையீரலுக்கு போகிறது. நுரையீரலுக்கு சென்ற நிக்கோடின் அடுத்த 6 நொடிகளில் மூளையை அடைகிறது.

நிகோடினால் மூளை சுறுசுறுப்படைகிறது. இதனால் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது. இதன் விளைவாக உடலின் பல பாகங்களுக்கும் அதிகமான ரத்தம் பாய்கிறது. சுறுசுறுப்பு, உற்சாகம், சிந்தனை சக்தி, கற்பனை திறன் ஆகியவை அதிகரிக்க இதுதான் காரணம்.

சிகரெட்டில் இருக்கும் நிகோடின் மிக சக்தி வாய்ந்த விஷம். அரை சொட்டு நிகோடின் ஒரு மனிதனை உடனடியாக கொல்லும் சக்திவாய்ந்தது. சிகரெட்டில் மிக குறைவான அளவில் நிகோடின் உள்ளது.

கொஞ்சம் கொஞ்சமாக உடலில் சேர்ந்த நிகோடின் ரத்தக் குழாய்களை பாதிக்கிறது. இந்த குழாய்கள் சுருங்க ஆரம்பிக்கின்றன. இதன் விளைவாக ரத்தம் போவது பாதிக்கப் படுகிறது. இது மாரடைப்பு, ரத்த அழுத்தம் போன்ற நோய்களுக்கு வழி ஏற்படுத்துகிறது.

இதுதவிர, சிகரெட் புகையில் கார்பன் மோனாக்சைட் என்ற வாயு கலந்து உள்ளது. இது ரத்தத்தில் கலக்கும் போது ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களை நேரடியாக பாதிக்கிறது.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## நெய்யினால் நெஞ்சுவலி

பிரிட்டனில் வாழும் இந்தியர்கள் அந் நாட்டு மக்களை விட இரண்டு மடங்கு அதிக மாக நெஞ்சு வலியினால் துன்பப்படுகிறார்கள். இதன் தொடர்பாக இந்தியர்களின் உணவுப் பழக்கங்களை ஆராய்ந்த வல்லுநர்கள், அவர் கள் மற்றவர்களை விட கொழுப்புச் சத்து குறைவாக உள்ள உணவுப் பொருட்களையே உட்கொள்கிறார்கள் என்பதையும், பெரும் பாலானோர் சைவ உணவு உண்பவர்களாக வும், மது அருந்தாதவர்களாகவும் உள்ளனர் என்பதையும் அறிந்தனர். இதனால் இந்தியர் களின் உடல்நிலை பற்றிய குழப்பம் அங்கு ஏற்பட்டிருந்தது. ஆனால் இப்பொழுது இந்தி யர்கள் அதிக அளவில் உபயோகப் படுத்தும் நெய்தான் இதற்குக் காரணம் என்ற கருத்து நிலவுகிறது. வெண்ணெயை கொதிக்க வைக் கும் பொழுது அதில் உள்ள கொழுப்புச்சத்து பிராணவாயுவுடன் கலந்து ஆக்ஸைடுகளாக மாறி சக்தியடைந்த நிலையில் உள்ளது. இந்த ஆக்ஸைடுகள் இதயதமனியின் சுவர்களில் உள்ள செல்களை நச்சுப் படுத்துகிறது. இதனால் தமனியின் சுவர்கள் கடினப்பட்டு, அதன்மீது 'ஆத்ரோமா' என்ற பொருள் படிகி றது. இதோடு அதிகப்படியான எடை அழுத்தக் கோளாறுகள் ஆகியவையும் உண்டாகின்றன என மருத்துவர்கள் எச்சரிக்கை விடுத்துள்ள னர்.


**மாதம் 2,000 வரை சுயமாக சம்பாதியுங்கள்**

எங்கள் பைனான்சிங் கம்பெனிக்கு பிக்ஸட் டெபாஸிட் (FIXED DEPOSIT) சேர்த்துக் கொடுத்து மாத சம்பளத்தோடு மிகக்கவர்ச்சி கரமான கமிஷன் பெறலாம். சென்னையில் உள்ளவர்க்கு மட்டுமே இவ்வாய்ப்பு. முன் அனுபவம் உள்ளவர்களாயின் நன்று.

மலர்ச்சி நிதி — AP 638, அண்ணா நகர், சென்னை-600 040 — Advt.


FREE E - BOOKS , www.thamizham.net.,

நவமணிகள் சிறந்த தொழில் நுட்பநூல் (75-00) -டாக்டர் அ. அய்யூப்—நவமணி பதிப்பகம். சி. ஐ. டி. குடியிருப்பு, சென்னை-600004.

பயணம் திங்கள் ஏடு—ஆசிரியர்/வெளியிடுபவர் மு. அந்தாலன்—முகவரி. 159, வன்னியர் தெரு, சென்னை—600094, தனி இதழ் ரூ 2.00, ஆண்டு நன்கொடை ரூ 25.00

வாழ்க்கை ஒரு விசாரணை நாவல் (25.00) —பாவண்ணன்—புத்தக பூங்கா வெளியீடு, (தொலைபேசி 846382) 52, ஐயம் பெருமாள் முதலி தெரு, இராயப்பேட்டை சென்னை—600014

அருணன்—மாத இதழ்—ஆசிரியர்/வெளியிடுபவர் கி. அருணன்—முகவரி 230, திருவள்ளுவர் நகர், இராமநாதபுரம், கோவை—641045, தனி இதழ் ரூ—1.00 ஆண்டு சந்தா ரூ 15.00 ஆயுள் சந்தா ரூ 350.00

## எமக்கு வந்தவை

MURDER MOST FOUL (MURDER OF VASANTHAN BY MUHUNDAN)—S. A. DAVID, 559, 9th ST, 2nd AVENUE WEST ANNANAGAR EXTN, MADRAS—600101.

மொழி உரிமை (8.50) கு. வெ. கி. ஆசான் பூங்குன்றன் பதிப்பகம், திருவேங்கடம் தெரு, வடகோவை, கோவை—641002.

மனிதவிறு மாதஇதழ் ஆசிரியர்-முனைவர் திருமதி—சாலினி இளந்திரையன், முகவரி—11 திருவிதியான் தெரு, கோபாலபுரம், சென்னை 86, தனிஇதழ் ரூ 1.00 ஓர் ஆண்டு சந்தா ரூ 12.00 வாழ்நாள் சந்தா 250.00

விடியலைத் தேடும் விரல்கள் கவிதை தொகுப்பு—(1.00) தொகுப்பாசிரியர்—சோலை இசைக்குயில்—சோலை இசைக்குயில்: மே. ச. குப்பம், ரெட்டியூர் அஞ்சல், ஜோலார்பேட்டை, வ. ஆ. 635851.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## உரத்த சிந்தனைக் கூட்டம்

### மேடைப் பிழிவு

**லேனா தமிழ்வாணன்** ★ இப்போதெல்லாம் ஒரு நடிகையை சந்தித்தது கூட இல்லை சந்திக்காதது பற்றியே 2½ பக்கம் எழுதி விடுகிறார்கள் பத்திரிகைக்காரர்கள்.

★ பத்திரிகைகளை திரையுலகின் விளம்பரங்கள் பாதிக்கின்றன. இதனால் விமர்சனங்கள் விலை போய்விடுகின்றன.

**வலம்புரி ஜான்** ● பத்திரிகை விமர்சனம் கண் மையே தவிர கண் அல்ல. மூக்குத்தியே தவிர மூக்கு அல்ல. கதாநாயகனைப் பார்த்து பாமரர் படம் பார்க்க, இயக்குநரைப் பார்த்து படித்தவர்கள் போகிறார்கள். பத்திரிகை விமர்சனங்கள் என் படத்திற்கு 100க்கு 10 மார்க் போட்டாலும் 100 நாட்கள் ஓடும்.

**பழ கருப்பையா** ○ இங்கு வாணிபமே யதார்த்தம். பாகவதர் பாடல்களும் படைப்பு தான். மியூஷிக்கல் அகாதமி ராகமாலிகையும் படைப்பு தான். கும்பகோண வீதிப் பாடகனின் டப்பாங்கூத்தும் படைப்புதான். தரம் என்பது மனதை, ரசனையைப் பொருத்தது.

**சாருஹாசன்** ● தமிழ்நாட்டில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் இந்த திரை உலகம் கமர்ஷியல் யுகம் தான். கர்நாடகாவில் ராஜ்குமார். அமெரிக்காவில் ஜேம்ஸ்பாண்ட் மேலை நாடுகளில் E.J. ஜாஸ், புரூஸ்லி.

○ 3 கோடி மக்களைக் கவர்ந்தால் தலைவன். 1 கோடி பேரைக் கவர்ந்தால் ஹீரோ. 10 பேரைக் கவர்ந்தால் அவார்ட் படம்.

**G. வெங்கடேஸ்வரன்** ★ கள்ள வீடியோ கள்ள சாராயம் போல பரவியுள்ளது.

— ரவுஸ்பாரத்

(எல்.எல்.ஏ. பில்டிங், சென்னை. 29—9—87

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பெண் உரிமைகள்

உலக மக்கள் தொகையில் சரிபாதியாக பெண்கள் உள்ளனர். இவர்களுக்கு சம உரிமைகள் இல்லை குறிப்பாக ஐந்து முக்கிய அடிப்படைகளில் பெண்கள் அடிமைப்படுகிறார்கள் எனலாம்.

**1 சரிசமமான ஊதியம்**

பல நாடுகளில் ஒரே வேலைக்கு ஆண்களைக் காட்டிலும் பெண்களுக்கு குறைவாக ஊதியம் அளிக்கப்படுகிறது. தொழிற்சாலையில் வேலை பார்க்கும் பெண்கள் ஆண்களை விட 60.3% குறைவாக சம்பளம் பெறுகின்றனர் ஜப்பானில் 43% குறைவாகப் பெறுகின்றனர்.

**2 சரிசமமான வேலை வாய்ப்பு**

ஆண்களைப்பேல் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளும், வேலை உயர்வுகளும் பல நாடுகளிலும் இல்லை. பெண்கள் அதிகமாக வேலைச்செய்யும் கல்வித்துறையிலும்கூட பதவி உயர்வு வாய்ப்புகள் பெண்களுக்கு மறுக்கப்படுகின்றன.

**3 ஆண் பெண் உறவில் விடுதலை**

பெண்கள் தங்களுக்கான காரியங்களை தீர்மானிக்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். விரும்பும் அளவுக்கு குழந்தைகள் பெற்றுக் கொள்ள, கருத்தடை செய்துகொள்ள மற்றும், தீர்மானம் எடுக்க அவர்களுக்கு உரிமைகள் மறுக்கப்படுகின்றன எனலாம்.

**4 பலாத்காரத்திலிருந்து பாதுகாப்பு**

வீட்டிலும், வெளியிலும் பல கொடுமைகளிலிருந்து பெண்களுக்கு இன்னும் விடுதலை கிடைக்கவில்லை. பொது இடங்களில் பயமுறுத்துவது, கற்பழிப்பு போன்றவை சாதாரணமாக நடைபெறுகின்றன. வீட்டிற்குள் நடக்கும் உடல் சார்ந்த கொடுமைகளை குற்றங்களாக சட்டமும் சமுதாயமும் பல நேரங்களில் கருதுவது இல்லை.

**5 போராடும் உரிமை**

தங்கள் உரிமைகளுக்காக ஒன்றாக போராடவும் பெண்களுக்கு உரிமை வேண்டும். பெண்ணுரிமை போராட்டங்களை கேலிக் கண்களோடு சமுதாயம் பார்க்கக்கூடாது.

— என். பத்மினி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## தாழ்வுணர்ச்சி

சுதந்திரத்திற்குப் பின்பு ஆங்கில ஆதிக்க மொழி இருந்த இடத்தில் தாய்மொழி தமிழ் இடம் பெறும்; அவனும் அவன் பிள்ளைகளும் எளிதாக அவர்கள் மொழியில் பேசி, படித்து, எழுதி அலுவல் பார்த்து முன்னேறலாம் என்று அன்றைய அரசியல் கட்சியால் நம்பிக்கை ஊட்டப்பட்டது. ஆனால் அந்த நம்பிக்கையும் ஒரு முழு மோசடி என்பது சுதந்திரத்திற்குப் பின் தெளிவாகி விட்டது. ஆளும் பீடங்களிலிருந்து ஆங்கிலம் அகற்றப்பட்டமை, அகற்றப்பட்டுக் கொண்டு வருகின்றமை என்னவோ உண்மைதான். ஆனால் ஆங்கிலத்தின் இடத்தில் இவனுக்குச் சுதந்திரத்திற்கு முன்பு சொல்லப்பட்டது போல அவன் நம்பிக் கிடந்தது போல அவனுடைய தாய்மொழியாகிய தமிழ் இடம் பெறவில்லை. அதற்கு முற்றும் மறுதலையாக, இந்தி பீடம் ஏற்றப்படுவதை அவன் கண்டான்; கண்டு கொண்டு இருக்கிறான். ஒரு மொழி ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருந்த நிலைமை விரிந்து இந்தி என்று இரண்டாவது மொழிக்கும் அவன் சுதந்திரம் பெற்ற பின் அடிமைப்பட நேர்ந்தது.

தாய்மொழி தமிழால் என்ன பயன்? வேலை கொடுக்குமா? கொடுக்காது. வேறு மாநிலத்தில் வேலை பெற முடியுமா? முடியாது. வெளிநாடுகளில் வேலை பெற இயலுமா? இயலாது. உள்ளூர் நீதி மன்றத்தில் அவன் மொழி செல்லுபடியாகுமா? ஆகாது. நடுவணரசு அலுவலகத்தில் தமிழ்மொழி வழி அவன் தொடர்பு கொள்ள முடியுமா? முடியாது. கோயிலுக்குப் போனால் தமிழால் வணங்க முடியுமா? முடியாது. தமிழ்மொழி வழி மண நிகழ்ச்சி பிண நிகழ்ச்சி நடத்த முடியாது? முடியாது. இப்படி எங்கும் எதிலும், தன் மொழியால் முடியாது என்று தமிழன் பற்றி ஒடிக்கப்பட்ட நிலையில் தன் மொழி முயுமகு தாழ்வுணர்ச்சியை நிலையாக அவன் கொள்ளத் தொடங்கி விட்டான்.

**க.ப. அறவாணன்**

FREE E-BOOKS , www.thamizham.net.,

# திருமலை திருப்பதி தேவஸ்தானம்



1951-ல் இந்து அறநிலையத்துறை சட்டத்தின் கீழ் 11 அங்கத்தினர்கள் கொண்ட திருமலை திருப்பதி தேவஸ்தானம் என்ற அமைப்பு தோற்றுவிக்கப்பட்டது. தற்போது இதன் கீழ் 6,000 பேர்கள் வேலை செய்கின்றனர். இது ஏற்படுத்தியுள்ள ஒழுங்கு முறைபடி கடவுளை கட்டணமின்றி தரிசிக்க 8 மணி முதல் 12 மணி நேரம் வரிசையில் நிற்க வேண்டும் கால் கடுக்க நிற்போர் சுலபமாக தரிசிக்க ரூ. 25க்கு டிக்கெட் விற்பனை செய்கிறது. இதன் மூலம் வரவு 3 கோடி. இருந்தும் அரசியல்வாதிகளோ, தொழில் அதிபர்களோ தான் உடனடியாக தரிசிக்க இயலும்.

பஸ்ஸுக்கு, மொட்டையடிக்க, லட்டு வாங்க, தங்குமிடங்களுக்காக என்று எங்கு பார்த்தாலும் கியூவில் நின்றுதான் வர வேண்டும் என்பது தேவஸ்தானத்தின் விதி. ஆனால் லஞ்சம் கொடுத்து விட்டு கொல்லைப் புற வழியாகவும் உள்ளே செல்லலாம். இங்கு மது, புலால் உணவு தடுக்கப்பட்டுள்ளது. ஆனால் லஞ்சம் மூலம் இவற்றைப் பெறலாம்.

தேவஸ்தானம் பல தர்ம சாலைகளையும், வீடுகளையும் கட்டியுள்ளது. இங்கு அனைத்தும் இலவசம் என்பது எழுத்தில் மட்டுமே. தேவஸ்தானம் நடத்தும் வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கப்படுகிறது. வேறு சில கோயில்களையும் பராமரித்து வருகிறது. அண்மையில் தினமும் 1,000 பேருக்கு இலவச சாப்பாடு போடவும் தொடங்கியுள்ளது. நற்பணிகள் பலவற்றை மேற்கொண்டாலும் சேவை மனப்பான்மை, சமுதாய முன்னேற்றம் போன்ற உணர்வுவில்லாததால் எல்லாமே பெயரளவில் நின்று விடுகின்றன.

(நன்றி: கேரவன்) — நிலா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## புதுமைப் பித்தன் பற்றி . . .

அனுபவங்களை சிதைக்காமல் தன் பார்வையில் முழுமையாகத் தரும் சுய அபிமானமற்ற தன்மை, தன்னிலிருந்தே விடுதலை பெற்று நிற்றல், புற உலக இயக்கத்தையும் விலகி நின்று விமர்சிக்கும் குணம் புதுமைப்பித்தனைப்போல் வேறு எவரிடத்திலும் இல்லை.

புதுமைப்பித்தன் ஒரு மத்திய தரக் குடும்பத்தில் பிறந்தவர். தாயைச் சிறுவயதில் இழந்த இவரது இளமைக்காலம் சோதனைகள் நிறைந்தது; மனவடுக்களை ஏற்படுத்தியது சிடுக்காய்ப் போய்விட்ட, இவருக்கும் இவருடைய தகப்பனுருக்குமான உறவு, இவருடைய திருமணத்திற்குப் பின் அறுந்துபோகிறது. மனமொப்பும் இலக்கியப் பணியை வாழ்வின் நோக்கமாகத் தொடர இவருக்குச் சந்தர்ப்பம் இல்லை. எழுத்துத் தொழில், கலைஞனுக்கு வருமானமற்றது; வருமானமற்றது என்பதால் சமூக மதிப்பு அற்றது. குடும்பத்தினரால் அலட்சியப்படுத்தப்படுவது. பிழைப்பை முன்னிட்டுச் சென்னை செல்லும் புதுமைப்பித்தன், சொந்த மண்ணிலிருந்து வேரொடு பிடுங்கி எறியப்பட்ட வேதனைக்கு ஆளாகியுள்ளதை இவருடைய சில கதைகள் வெளிப்படுத்துகின்றன.

புதுமைப்பித்தனைப் போன்ற ஒரு மேதை, மேலான உலக இலக்கியப் படைப்பாளிகள் சிலருடன் ஒப்பிட்டுப் பார்க்கத் தகுந்த மேதை நோபல் பரிசு பெற்றுள்ள ஒரு சிலரையேனும் பின் தள்ளிவிடும் மேதை, செய்திகளை மொழி பெயர்த்துத் தன் காலத்தைத் தள்ள நிர்பந்திக்கப்பட்டார் என்பது மிகவும் வெட்கப்படத் தகுந்த தலைக்குனிவாகும். ஆனால் நம் கலாச்சாரத் தலைமை வெட்கமற்றது; சுயபோதம் அற்றது. தலைக்குனிவுகளுக்குரிய பொறுப்பின் மையில் திளைத்துக்கொண்டே மீசையில் கைபோட்டு வீறாப்புப் பேசக்கூடியது.

**சுந்தர ராமசாமி**

FREE E - BOOKS , www.thamizham.net.,

## காய்ச்சல்

''என்னங்க இந்த போஸ்டரை ஒட்டவா போறீங்க''

''ஆமாம். என்ன செய்யறது? நம்ம பொழப்பாச்சே...''

''பொழப்புன்னா...? வர்ரது எல்லாமே ஆபாச போஸ்டர் தான். வேற வழியில்லை. சரி. ஆனால் இத ஒட்டித்தான் ஆகணுமா?''

அரசு மருத்துவமனை விரிவாக்க அடிக்கல் நாட்டுவிழா போஸ்டர். மந்திரி பெரிய எழுத்துக்களில் பேசுகிறார்.

''இதை ஒட்டணுமா? நம்ம குழந்தைய கொன்ன ஆஸ்பத்திரி போஸ்டரையா?''

அந்தப் பகுதிக்கு போஸ்டர் ஒட்டுபவன் ராமசாமி. அவனுக்கு ஓர் ஆண் ஒரு பெண். அதன் பிறகு அவன் மனைவி கு.க. செய்து கொண்டாள். மூத்த ஆண் பையனுக்கு காய்சலடித்தது. அரசு மருத்துவ மனைக்கு எடுத்துச் சென்றான். மருத்துவர்கள் சரிவர கவனிக்கவில்லை. அலைந்தான். கெஞ்சினான். அழுக்கடைந்த ஆடையும், எண்ணெயின் அறிமுகமில்லாத தலையும் டாக்டர் களால் உதாசீனம் செய்ய வைத்தது. தாமதமாக ஆஸ்பத்திரியில் சேர்ந்த பையன் துரிதகதியில் இறந்தான்.

★ ★ சிறுகதை

வைகறை. அவனது குடிசைக்கு முன் வெள்ளைக் கார் வந்து நின்றது. காரிலிருந்து அடிக்கல் நாட்டு விழா பொறுப்பாளர் இறங்கினார். மனைவி வெளியே வந்தாள்.

''ராமசாமி இருக்கானா? ஏன் இன்னும் போஸ்டர் ஒட்டலை? இன்னைக்கு விழா. ஒட்டலேன்னா என்ன அர்த்தம்? மந்திரியே OK. செய்த போஸ்டர் அது. ஒட்டலேன்னா மந்திரிக்கு என்ன பதில் சொல்றது?''

''அவருக்கு ராத்திரியிலேந்து காய்ச்சல். எழுந்திருக்க முடியலை. போர்த்திக்கிட்டு படுத்திருக்காரு...''

— நா. தென்னிலவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

விஸ்வநாத், பத்ரிநாத், பூரி ஆகிய ஆலயங்களுக்குச் சென்று வழிபட்டால் இறந்த பிறகு முக்தி கிடைக்குமாம். ஆனால் திருப்பதி சென்றால் இவ்வுலகிலேயே பலன் கிடைக்குமாம். அதனால் தான் சகலரும் வெங்கடாசல பதியிடம் ஓடுகிறார்கள். திருப்பதி 2000 ஆண்டுப் பழமையானது. ராமாநுஜர் 12-ஆம் நூற்றாண்டில் திருப்பதி வந்து, மேரு மலைக்கு இணையாகக் கருதி, அரசர்கள் வள்ளல்களிடம் பொருளுதவி பெற்று இங்கு பல கோயில்களைக் கட்டினார்.

*1843*-ம் ஆண்டு கிழக்கிந்திய கம்பெனி இந்தியாவை ஆளத் தொடங்கியபின் ஹாதிராம்ஜி பந்த் என்பவர் 90 வருட காலம் இப் பணிகளைத் தொடர்ந்து செய்தார். இவர்

# திருப்பதி திருத்தலம்

இனத்தவர்களே வெங்கடாசலபதி பற்றி பல கட்டுக்கதைகளை வதந்தி வடிவில் உலவ விட்டவர்கள். இவர்களது விளம்பரத்தினால் ஈர்க்கப்பட்ட பக்தர்களின் காணிக்கையை கொள்ளையடித்தனர். கொள்ளை அதிகரிக்கவே 1930-ல் அரசு நிர்வாகத்தில் தலையிட்டது.

காலணிகளுடன் யாரும் இம்மலை மீது ஏறக் கூடாது, எங்கும் எச்சில் துப்பக் கூடாது. சிறுநீர் மலம் கழித்து அசுத்தம் செய்யக்கூடாது என்றெல்லாம் பக்தர்களுக்கு விதிமுறைகள் இராமாநுஜரால் வகுக்கப்பட்டது. அவர் வகுத்த இந்நெறி முறைகள் கடைபிடிக்கப் படுவதில்லை.

(நன்றி: கேரவன்) — நிலா

---

கூட்டு

தொடர்பு முகவரி:
AP 638, H பிளாக், அண்ணா நகர்,
சென்னை—600040.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## டி. வி. பார்த்தால் மூளை பாதிக்குமா?

இன்று நம்மில் பலர் தங்களுடைய ஓய்வு நேரம் முழுவதையும் டி. வி. பார்ப்பதிலேயே கழிக்கிறார்கள். இவர்களுள் குழந்தைகளும் அடங்குவர். கஞ்சா அபின் போன்ற போதைப் பொருட்களை உபயோகிப்பவர்கள் அதிலிருந்து மீள நினைத்தும் முடியாததைப் போன்ற நிலை டி. வி. முன்னால் உட்கார்ந்திருப்பவர்களுக்கும் ஏற்படுகிறது. டி. வி. பெட்டியின் ஒளி வீசும் திரையானது, பார்ப்பவர்களிடையே ஒரு விதமாக ஈடுபாடு கொள்ள செய்கிறது. தொடர்ந்து அதிக நேரம் டி. வி. பார்த்தால் அவர்களுடைய ஞாபகசக்தி, உடல் ஆரோக்கியம், பழக்க வழக்கங்கள், கண்களின் ஆரோக்கியம் ஆகியவை பாதிக்கப்படுகின்றன.

தினமும் ஒரு மணி நேரத்திற்கு மேல் டி. வி. பார்க்கும் குழந்தைகளின் ஞாபகசக்தி, திறமை போன்றவை குறைந்து வருவதாக புள்ளி விவரங்கள் காட்டுகின்றன. அவர்களுடைய மூளைசிந்திக்கும் திறனைக் குறைத்து விடுகிறது.

படிக்கும் கலை என்பது ஒரு சவாலாக மகிழ்ச்சியாக நாகரிகத்தின் தொடக்கமாக அமைகிறது. அத்துடன் தனிமனிதனை குடும்ப வாழ்க்கையில் ஈடுபடுத்தவும் கருவாக அமைவதாகச் சொல்லலாம். அதே நேரத்தில் டி. வி. பார்ப்பது என்பது நம்மை பொழுது போக்கில் மட்டும் ஈடு படுத்துகிறது.

மேலும், டி. வி. யில் ஒளிபரப்பப்படும் திரைப்படங்கள், ஒளியும் ஒலியும் போன்றவற்றில் காண்பிக்கப்படும் காதல்காட்சிகள், சில விளம்பரங்கள் ஆகியவை குழந்தைகளை குழப்ப நிலைக்குத் தள்ளுகின்றன.

குழந்தைகளின் வேண்டாத பழக்கமான டி. வி. பார்க்கும் பழக்கத்தை மாற்ற நாம் அவர்களுக்கு வேறொன்றை வழக்கமாக்க வேண்டும். புத்தகம் படித்தல் அவர்களுக்கு இவ்வாறு கற்பிக்கத் தகுந்தவற்றுள் ஒன்றாகும்.

•

FREE E - BOOKS , www.thamizham.net.,

## ஈழம் இன்னொரு வியட்நாம்

10 நாட்களுக்கு முன்னால், இந்திய ராணுவம், யாழ்பாணத்தை நெருங்கிக் கொண்டிருப்பதாய், நம் வானொலியும் தொலைக் காட்சியும் கூறின. நேற்று (23—10—87) இரவுச் செய்தியிலும், யாழ் நகரை நெருங்கு வதாய், தொலைக்காட்சி கூறியது.

'யாழ்' என்ன அவ்வளவு பெரிய நகரமா? இந்தியாவில் பாதியா? மொத்த இலங்கைத் தீவே 270 மைல் நீளமும், 140 மைல் அகலமும் 25,332 சதுர அடியும் மட்டுமே கொண்ட, ஒரு மிகச் சிறிய தீவு, அந்தத் தீவில், ஒரு மிகச் சிறிய பகுதியே யாழ்ப்பாணம், அந்த 'யாழ்' நகரத்தைத்தான், ஆள், அம்பு, எடுபிடி, சேனை எல்லாம் கொண்ட நம் இந்திய ராணுவம் 13 நாட்களாய் 'நெருங்கிக் கொண்டே' இருக்கிறது.

அப்படியானால் உண்மை என்ன?

நெருங்க முடியவில்லை என்னும் உண்மையை மறைக்கவே 'நெருங்கிக் கொண்டே இருக்கும்' பல்லவி பயன்படுத்தப் படுகிறது.

ஆப்கானிஸ்தானில் புகுந்த ரஷ்யப் படையையும், வியத்நாமில் புகுந்த அமெரிக்கப் படையையும் போலவே ஈழத்தில் நுழைந்த இந்தியப் படையும் தடுமாறுகிறது. என்னதான் வலிமை மிகுந்த ராணுவமாயிருந்தாலும், ராணுவத்தினர், கூலிக்காகத் துப்பாக்கி தூக்கியவர்கள். போராடும் மக்களோ, உரிமைக்காக துப்பாக்கி தூக்கியவர்கள்.

—சுபவீ

ஆசிரியர் : கு. நாராயண பாரதி,
வெளியிடுபவர் : கி. இராமச்சந்திரன்,
அச்சிடுபவர்: எம். எஸ். ரவீந்திரன்,
ரவீந்திரன் பிரஸ், 137 டாக்டர் நடேசன் ரோடு
சென்னை-600005.
முகவரி : 1494, அண்ணா நகர்,
சென்னை-600040

FREE E - BOOKS , www.thamizham.net.,

## தலைவர்களின் மூலதனம் சினிமா

இன்றைய அரசியல் தலைவர்கள், சினிமா என்னும் தொழிற்சாலையில்தான் தயாரிக்கப் படுகிறார்கள். சினிமா தமிழ்ச் சமூகத்தின் மீது ஏன்-மொத்த இந்தியாவின் மீதும் கையைவைத் திருக்கிறது. சுமார் 60 சதவீதம் எழுதப் படிக்கத் தெரியாத மக்களைக் கொண்ட நாட்டில் படித்தவன் படிக்காதவன் என்ற வேறுபாடுகள் இன்றி எல்லோருடனும் உறவாடி அவர்களது கனவுகளைப் பகிர்ந்து கொண்ட காரணத்தினால் சினிமா சக்திமிக்க மக்கள் கலையாக மலர்ந்திருக்கிறது. வறுமைக்குப் பெயர்போன இந்தியாதான் பணக்கார ஹாலிவுட்டிற்கு அடுத்தப்படியாக அதிகமாக சினிமாப் படங்களைத் தயாரிக்கும் நாடு என்று சொன்னால் ஆச்சர்யமாக இருக்கலாம். இந்தியாவின் 10 பெரும் தொழில் களில் ஒன்று சினிமா.

— இந்திரன்

---

### பணவீக்கம்

அன்றாட தேவைப் பொருட்கள் விலை உயர்வால் இந்தியாவில் சராசரி

| | | | |
|---|---|---|---|
| பணவீக்கம் | | — | 7.7% |
| சென்னையில் பணவீக்கம் | | — | 12.4% |
| பம்பாயில் | ,, | — | 9.3% |
| பெங்களூரில் | ,, | — | 9.4% |
| ஜெய்ப்பூரில் | ,, | — | 8.6% |
| லட்சுமணபுரியில் | ,, | — | 8.6% |
| கல்கத்தாவில் | ,, | — | 7.2% |

— தகவல்: மத்திய புள்ளி விவர ஸ்தாபனம்

● இந்திய சராசரியை விட கல்கத்தாவில் வீக்கம் குறைவு.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# திருமணச் செலவு

❋ இந்தியாவில் பெரும்பாலும் திருமணங்கள் சம்பிரதாயங்களாக நடைபெறுகின்றன. எனவே பதிவு செய்யப்படாமல் போகின்றன.

❋ இதனால், நடைபெறும் திருமணங்கள் குறித்து சரியான புள்ளி விவரங்கள் கிடையாது. 1000 பேருக்கு எத்தனை திருமணம் என்னும் கணக்கிற்கு வாய்ப்பில்லை.

❋ எனினும் புள்ளிவிவரத்தை அடிப்படையாக வைத்து, மொத்த திருமணங்கள் சற்றேறக்குறைய 1,40,000 என கணக்கிடலாம்.

❋ ஒரு திருமணத்திற்கு சராசரி செலவு ரூபாய் 5000 என்று வைத்துக்கொண்டால், ஆண்டொன்றிற்கு திருமணங்களுக்கு ஆகும் செலவு 700 கோடி ரூபாயாகும்.

❋ இது ஒரு சாதாரண தொகையில்லை. இதைக் கட்டுப்படுத்தினால் பொருளாதார பணவீக்கத்தை ஓரளவு தடுக்கலாம்.

❋ ஆடம்பர கொண்டாட்டங்களில் உணவிற்கும், ஒளி அலங்காரங்களுக்கும், பொழுது போக்கிற்கும் எவ்வளவோ பணம் விரயமாகின்றன. இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

❋ எனவே திருமணம் போன்ற சமூகக் கொண்டாட்டங்களில் பணச் செலவீனங்களைக் கட்டுப்படுத்துவதால் பொருளாதாரத்தில் பணவீக்கத்தை நிச்சயமாக குறைக்கலாம்.

❋ தொழிலுக்கும், வியாபாரத்திற்கும் வரதட்சணை முறை சாதகமாக உள்ளது.

❋ வரதட்சணை பரவலாவதற்கும், பொருளாதாரத்தை பாதித்து பணவீக்கத்தை உண்டுபண்ணும் சமூக விரயங்களுக்கும் நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ திருமண செலவுகள் கராணமாகின்றன.

— செ. மா.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## போதைப் பொருள்கள்

### சமூகத்திற்கு போதைப் பொருள்களால் நேர்ந்த நஷ்டங்கள் (ஆண்டுக்கு)

| | மில்லியன் அமெரிக்க டாலர் |
|---|---|
| **வேலைகளில் செலவுகள், இழப்புகள்** | |
| கவனக்குறைவு, தவறுகள், நோயால் விடுமுறை | 33,751 |
| வேலை நேர இழப்பு, வேலை செய்வதில் தடைகளேற்படுத்துதல், குற்றம் புரிதல். | 10,846 |
| சமூக மேம்பாட்டுக் காரியங்கள் | 3 |
| காவலில் வைத்தல், சிறையிடல் | 2,425 |
| **ஆரோக்கியம் மற்றும் மருத்துவ சம்பந்தப்பட்ட செலவுகள்** | |
| போதைப் பொருள் உபயோகிப்போருக்கு நேரடி சேவைகள்— (குறுகிய கால மருத்துவ பராமரிப்பு மருத்துவர் சேவை, மற்றும் புனர் வாழ்வு மையங்களின் சேவைகள்.) | 2,049 |
| போதையில் சாவுகள், குறிப்பாக எதிர்பாராத்து அளவுக்கு அதிகமாக போதைப் பொருள் சாப்பிடுதல், | 2,486 |
| **குற்றங்களில் செலவுகள்** | |
| பொது மற்றும் தனியார்கள் குற்றத்திற்காக நீதி முறை செலவுகள் | 6,565 |
| குற்றம் கண்டு பிடிக்கும் கருவிகள், குற்றம் நடந்தபிறகு வீணான நேரங்கள் மதிப்பு | 945 |
| இதர செலவுகள் | 677 |
| மொத்தம் | 59,747 |

தொகுப்பு: பம்பாய் புதியவன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பிச்சை

யோசித்துப் பார்த்தால் இந்தியாவில் வறுமையை ஒழிப்பது கூட சாத்தியமானதாக இருக்கலாம்; ஆனால் பிச்சையை ஒழிக்க முடியுமா என்பது அச்சம் தரும் ஐயமாகவே இருக்கிறது.

பிச்சையெடுப்பதற்கான சமூக நியாயங்கள் எவ்வளவோ இருந்த போதிலும் அதிலிருந்து தப்பிப்பதற்கும் அதை விட அதிகமான வாய்ப்பு வசதிகள் இருக்கும் என்றுதான் தோன்றுகிறது.

உடல் ஊனமுற்றோர், தொழுநோயாளர் ஆதரவில்லாத அனாதைப் பெண்கள், முதியோர்.... இவர்களே பெரும்பாலும் பிச்சை யெடுப்பவர்களாக இருக்கிறார்கள். அல்லது இவர்களைப் போல நடிப்பவர்கள் பிச்சை யெடுக்கிறார்கள்.

எந்த உடற் குறையும் இல்லாத தடியர்கள் சிலரும் பிச்சையெடுக்கிறார்கள். வெட்கத்தை விற்ற இவர்கள் குறைந்த பட்சம் பழைய பேப்பர் பொறுக்கினால் கூட அன்றாடம் வயிற்றைக் கழுவிக் கொள்ளலாம்.

சரி...பிச்சை யெடுப்பவர்களின் மூலதனம் என்ன? நமது இரக்க உணர்ச்சிதான். அது மட்டுமல்ல... தர்மம் செய்வது பரலோக வாழ்விற்கான 'ஃபிக்சட் டெபாசிட்' என்ற மக்களின் மூட நம்பிக்கையும் பிச்சைக் காரர் களை ஊக்குவிக்கிறது.

பிச்சைக்காரர்களின் வருமானம் சராசரி இந்தியனின் வருமானத்தை விட அதிகமாக இருக்கிறது. பல பிச்சைக்காரர்கள் வங்கிக் கணக்கு உடையவர்களாகவும், வட்டிக்கு பணம் கொடுப்பவர்களாகவும் இருப்பது அபாயகரமான யதார்த்தம்.

யானை, குரங்கு, பாம்பு போன்ற மிருகங் களை வைத்துச் சிலர் பயமுறுத்திப் பிச்சை யெடுக்கிறார்கள். பிச்சைக் காரர்கள் மறுவாழ்வுத் திட்டம் மறு வாழ்வு பெற்று இப் பிச்சைக்காரர்களை ஒழித்தால் தேசத்தின் பெருமை காப்பாற்றப் படும்.

— ருக்மணி மைந்தன்

FREE E - BOOKS , www.thamizham.net.,

# பெண்கள் படைப்பில் பெண்கள்

புத்தகப்பிரிவு

அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகம் நடத்திய கருத்தரங்கில் வாசிக்கப்பட்ட கட்டுரைகளும் அவற்றின் மீது நடைபெற்ற விவாதங்களும் அடங்கிய நூல். ஒன்பது பெண் எழுத்தாளர்களின் கதைகள் திறனாய்வு செய்யப் பட்டுள்ளன. பேராசிரியர்கள் மட்டு மல்லாது மாணவ மாணவியரும், குடும்பத் தலைவி ஒருவரும் கலந்து கொண்ட மாறுபட்ட கருத்தரங்கம். பெண் எழுத்தாளர்கள் என்று ஜாதி பிரிக்கும் படி அவர்களின் படைப்புகள் அமைந்திருக்கும் அவலத்தை இக்கட்டுரைகளை வாசிப்பவர்கள் அறியலாம். இக்கட்டுரை களைப் படித்த பிறகு பெண்கள் பிரச்சனை களைக் கூட பெண் எழுத்தாளர்கள் சரியாக அணுகவில்லையோ என்று தோன்றுகிறது.

● நாவலாசிரியர்கள் என்ற முறையில் பெண்கள் எப்போதும் தன்னுணர்வு கொண்ட வர்களாவே செயற்படுகின்றனர்.

● சமகால சமுதாய உணர்வின்றி பழைய பிரச்சனைக்கு மீண்டும் உயிர் கொடுக்கும் நாவலாசிரியரின் (அனுராதா ரமணன்) கற்பனை எல்லைச் சுருக்கம் அவர்தம் படைப் பாற்றலின் தோய்மைத் தன்மையை சுட்டிக் காட்டுகிறது.

● பிரபஞ்சன்: பெண் எழுத்தாளர்களின் மீது எனக்கு நம்பிக்கை இல்லை. இவர்கள் கதைகள், என்னைக் கவர்ந்ததில்லை. ஜனரஞ் சகப் பத்திரிக்கையில் பெண் பேராலும், பெண் களாலும் எழுதப்பட்ட கதைகளை ஒரு பாரா கூட என்னால் படிக்க முடிந்ததில்லை. 'ஆயிரம் அசட்டுத் தனங்களின் புகலிடம்' என்ற சுந்தர சாமியின் கருத்தை நான் ஏற்கிறேன்.

● இந்து மதியின் கதைகளில் சில, நீதி விளக்கக் கதைகளாக உள்ளன.

விலை ரூ. 40/-

வெளியீடு: அன்னை தெரஸா மகளிர் பல்கலைக் கழகம், கொடைக்கானல்.

— B. S.

FREE E - BOOKS , www.thamizham.net.,

## தனியார் ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் தவிப்பு

சென்ற ஆண்டு கல்வித்துறை சம்பந்தமான செய்திகளில், தினசரிகளில் அதிகம் இடம் பெற்றது தனியார் ஆசிரியர் பயிற்சி பள்ளிகளைப் பற்றியதுதான். அரசு அங்கீகாரம் பெறாத ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் படித்த மாணவர்களை அரசு தேர்வுடன் தேர்வு எழுத அனுமதிக்கப் படவில்லை. ஆனால் பல கருணை மனு மற்றும் சிறுபான்மையினர் இவ்வாறு நடத்தலாம் என்ற சலுகைறைக் காட்டி டிசம்பர் 86-ல் தேர்வுக்கு அனுமதிப் பெற்று எழுதினர். இந்த ஆண்டிலும் அவ்வாறு அனுமதி பெற்று எழுதினார்கள். ஆனால் அவர்களின் தேர்வு முடிவுகள் இதுவரை அறிவிக்கப்படவில்லை. நகையை, நிலத்தை அடமானம் வைத்து தேர்வு எழுதிய மாணவர்கள் தேர்வு முடிவும் தெரியாமல், பணத்தையும் கேட்க முடியாமல் பயிற்சிப் பள்ளியில் சமர்பித்த சர்டிபிகேட்களையும் பெற இயலாமல் கஷ்டப்படுகிறார்கள். அப்படியிருந்தும் தினசரி சிலவற்றில் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் சேரும்படி விளம்பரங்கள் வெளி வருகின்றன. இனி தேர்வுக்கு அனுமதித்தாலும் அனுமதிக்கா விட்டாலும் தேர்வு எழுதிய மாணவர்களின் முடிவு தெரிவிக்கப் பட்டால் அவதிப் படும் மாணவர்கள் ஆனந்தப் படுவார்கள். அமைதி பெறுவார்கள். தனியார் ஆசிரியர் பயிற்சி மாணவர்களின் தவிப்பை அரசு தவிர்க்குமா?

— மறுமலர்ச்சி பித்தன்

---

'சுட்டி' வருட சந்தா ரூ. 10-00

ஆயுள் சந்தா ரூ. 150-00

FREE E - BOOKS , www.thamizham.net.,

❋ Dr. க. ப. அறவாணனின் 'மொழி வழி பண்பாட்டு அழிவு' கட்டுரை சிறந்த சிந்தனையை எழுப்பும் வண்ணம் அமைந்திருந்தது. விழியை விழுங்கும் விளம்பரங்கள் சரியான சமயத்தில் விடுக்கப்பட்ட எச்சரிக்கை.

—துரை நீலகண்டன், ஆவடி

❋ பத்திரிகைக் காரர்களும் வாசகர்களை கேவலமாகவே நினைக்கிறார்கள். மறந்து விடுவார்கள் என்று நம்பி இன்று பல பத்திரிகைகள் போட்டிகளை அறிவித்து முடிவுகளை ஏமாற்றி விற்பனையையும் அதிகப்படுத்திக் கொள்கிறார்கள்.

—எஸ். வி. ராஜசேகர், சென்னை—600005

❋ 'பத்திரிகையுலக பித்தலாட்டங்கள்' 100-க்கு 100 உண்மை. அவர் குறிப்பிட்ட பாக்கெட் நாவல் போட்டியில் பரிசு பெற்றவன் என்ற முறையில் கூறுகிறேன். இன்று வரை பணமோ —பாக்கெட் நாவல் இதழ்களோ வரவில்லை.

—எஸ். மூர்த்தி, மதுரை-1

# வாசகர் எதிரொலி

❋ 'லாட்டரிச் சீட்டுகள் தமிழகத்தில்தான் அதிகம் விற்பனையாகின்றன' என்பதைப் படித்தபோது வெட்கப்பட்டேன். வேதனைப் பட்டேன்.

—D. மகேஷ், வீரராக்கியம்.

❋ வெறும் பாரம்பர்யப் பெருமைகளை மட்டும் தகுதியாகக் கொண்ட ஏமாற்றுக் காரரான ராஜீவின் அரசியல் வேடங்களை 'ராஜீவின் வீழ்ச்சிகள்' கட்டுரை திரை நீக்கிக் காட்டியது.

—எம். சம்பத், வேலாயுதம் பாளையம்.

❋ தண்ணீர் எவ்வளவு பருகினாலும் நல்லது தான் என்ற நம்பிக்கையைத் தகர்த்தெறிந்தது 'நீர்ப்போதை' (மருத்துவப்பக்கம்)

— எம். பஷீர், ஹைத்ராபாத்.

FREE E - BOOKS , www.thamizham.net.,

# ரூப்கன்வர்

ஜனநாயக, சோஷலிச...நாடான இந்தியாவில் ரூப் கன்வர் எனும் ராஜஸ்தானிப் பெண் உடன் கட்டை ஏறி நம்மைத் தலை குனிய வைத்திருக்கிறாள்.

பாரதப் பெண்களில் பலர் இன்னமும் மரமாகவே இருக்கிறார்கள். ரூப் கன்வர் விறகாக மாறியிருக்கிறாள்.

திருமணமாகி எட்டே மாதமாகி இருக்கும் நிலையில் கணவன் இறப்பது பரிதாபமானதுதான். அவன் மீது வைத்த அன்பையும் காதலையும் நொடியில் பறிகொடுப்பது கொடூரமானதுதான்.

ஆனால்...அதற்காக தன் வாழ்வையே தீயில் வீசி எறிகிற காரியம் எந்த வகையில் லாபம் தரப் போகிறது? இராஜாராம மோகன்ராயை இதைவிட மோசமாக அவமானப் படுத்த முடியுமா?

தமிழ் நாட்டில் இதுபோன்ற மூடப் பழக்கம் தன்கைவரிசைகளைக் காட்டாமல் இருப்பதற்கு நமது நீண்ட கலாச்சார வரலாறுகள் காரணமாயிருக்கின்றன; பெரியாரின் பெருந்தொண்டு அரணாக இருக்கிறது. காமராசர் எனும் தமிழன் திறந்து வைத்த கல்விக்கண் கவசமாக இருக்கிறது.

கவிஞன் பாரதியும் அவன் வாரிசுகளும் காவலாக இருக்கிறார்கள்.

ஜனநாயகம், சோஷலிஸம் என்பதெல்லாம் இப்படிக் கல்வியும், இலக்கியமும், அரசியலும் வாழ்க்கை முறைகளும் சேர்ந்து உருவாகும் நாட்டில் அர்த்தம் செறிந்தவார்த்தைகளாக உலவும்.

ஆனால் வடநாட்டில் பெரியாரோ, காமராசரோ, பாரதியோ தோன்ற முடியாதவாறு தடுப்பதற்கு நிலப்பிரபுத்துவ மனப்பான்மையில் இருந்து விடுபடாத ரூப்கன்வர் போன்ற ஆயிரம் தடைகள் இருக்கலாம். அவற்றையெல்லாம் உடைக்கும் வீரர்கள் என்று தோன்றுவர்?

— பிருந்தாசாரதி

FREE E - BOOKS , www.thamizham.net.,

## காய்ச்சல் உடலுக்கு நல்லதா?

காய்ச்சல் என்பது உடலின் வெப்ப நிலையைச் சீராக்கும் உள்ளமைப்பின் தோல்வி யாகவே பெரும்பாலும்கருதப்படுகிறது. ஆனால் காய்ச்சல் பாக்டீரியாக்களின் தாக்குதலிலிருந்து விடுபட உதவும் ஒரு தன்மையான செயல் என்றே அண்மைக்கால ஆராய்ச்சிகளின் முடிவுகள் தெரிவிக்கின்றன.

பாக்டீரியாக்கள் உடலினுள் புகுந்தவுடன் இரத்தத்தில் உள்ள ஒருவகை வெள்ளை அணுக்கள் அவற்றை அழிக்கச் செயல்படும் போது, பைப்ரோஜென் எனப்படும் புரதப் பொருட்கள் உண்டாகின்றன. இவை மூளையில் உள்ள ஹைப்போதலாமஸ் எனப்படும் உடல் வெப்பநிலையைச் சீராக்கும் மையத்தைத் தாக்கி காய்ச்சலை உண்டுபண்ணுகின்றன.




மேலும் பைப்ரேஜென் இரத்தத் திலுள்ள இரும்பை கல்லீரலில் தேக்குகிறது. இதனால் இரத்தத்தில் இரும்பின் அளவு குறைகிறது. பாக்டீரியாக்களின் பெருக்கத்திற்கு உடலின் சாதாரண வெப்பநிலையும், இரும்பின் அளவும் மிகவும் உகந்தவை. காய்ச்சலின் போது, உடல் வெப்பநிலை உயர்ந்து, இரத்தத்தில் இரும்பின் அளவு குறைவதால் பாக்டீரியாக்களின் பெருக் கம் தடைபடுகிறது. இதனால் அவைகளை எளிதல் வெளியேற்ற முடிகிறது. ஆகவே. காய்ச்சல் உடலுக்கு நல்லதே என்ற ஒரு கோட் பாடு நிலவுகிறது.


# வேல் டைப்பௌண்டரி

- புதிய வகை 2 வண்ண அச்செழுத்துக்கள்
- எல்லா மொழி அச்செழுத்துக்கள்
- எல்லாவித அச்சக உபகரணங்கள்
- போஸ்டர் எழுத்துக்கள்

38, குட்டி தெரு, பெருமாள் பேட்டை,
சென்னை-7 தொ. பேசி. 27087


FREE E - BOOKS , www.thamizham.net.,

சுட்டி பதிவு எண் : TN/MS/(N)317

http://www.thamizham.net
FREE E - BOOKS (TAMIL)
தமிழ்க்கனல்

## இவன் இந்தியன்

தெருவின்
முதல் வீட்டில்
தீப்பிடித்து
எரிந்து கொண்டிருந்தால்
கடைசி
வீட்டுக்காரன்
வேகவேகமாக
தண்ணீரையள்ளி
ஊற்றிக்கொண்டிருப்பான்—
தன் வீட்டுக்கு!
**— வேங்கைமார்பன்**

## கவிதைகள்

தாகூர்
கொடுத்து வைத்தவர்தான்
திரையரங்குகள்
தேசிய கீதத்தை நிறுத்துமுன்
கவிதை எழுதுவதை
நிறுத்திக் கொண்டாரே!
**— துரை சண்முகம்.**

தொழிற்சாலை கட்ட
அடிக்கல்லுடன்
சேர்த்து
ஆர்டர் கொடுத்தனர்
'NO - VACANCY'
போர்டுக்கும்.
— எம். பஷீர்.

★ சுட்டி வாசகர் இயக்க விண்ணப்பம் பெறாதவர்கள் எழுதுங்கள்.

FREE E - BOOKS , www.thamizham.net.,